
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு11 தொகுதி 3 ஜுலை - செப்டம்பர் 2021


**R 5462**

## “ஆதாமுக்குள்ளானதும், ஓரளவு துணிகரமானதுமான பாவத்துக்கு பிராயச்சித்தம்”

## EXPIATION OF SIN - ADAMIC AND PARTIALLY WILFUL

பாவத்திற்கான பிராயச்சித்தம் இருவேறு கோணங்களிலிருந்து பார்க்கப்படலாம். முதலாவதாக, ஆதாமுக்குள்ளான பாவத்திற்காக தெய்வீக நீதியைச் சரிக்கட்டுவது அவசியம். ஆதாமின் கீழ்ப்படியாமையினால் மனுக்குலமானது மரிக்கவேண்டும் என்பது இப்பிரபஞ்சத்தின் மாபெரும் உன்னதமான நீதிபதியின் ஆணையாகும். மேலும் அவ்வாணைக்குண்டான தேவைகள் சந்திக்கப்பட்டு, இசைவாக்கப்பட்டு, அது இரத்துசெய்யப்படும்வரை, யாதொருவரும் மரணத்திலிருந்து விடுவிக்கப்படமுடியாது. ஆனபோதிலும், அந்த நீதியின் ஆணையை இரத்துசெய்வது, ஒரு தனிநபரை உடனடியாகப் பரிபூரண மனிதனாக்காது.

ஏதேனும் ஒரு குற்றத்திற்காக ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்து, பின்பு 10 வருடங்கள் கழித்து யாரொருவராயினும் அவருடைய கணக்கை அதற்கே உரிய சட்டத்தின் தேவைகளுக்கேற்ப செலுத்தி, நீதியைச் சரிக்கட்டி விடுவாரானால் அந்தக் கைதியானவர் விடுவிக்கப்படுவார். ஆனால் சிறைவாழ்வின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலைபெற்றாலும், அக்கைதி சிறைவாசம் அனுபவித்த காலத்தில் இழந்துவிட்ட அவரது தெளிவான பார்வை, பற்கள், தலைமுடி, ஆரோக்கியம் அல்லது எதையாகிலும் இழந்திருந்தாலும், பலவீனமாகியிருந்த எதையும் திரும்பக்கொடுக்காது. அதுபோலவே, நீதியைச் சரிக்கட்டுவதற்கான எதுவும் மனுக்குலத்திற்காகச் செய்யப்பட்டாலும் அவர்கள் கல்லறையிலிருந்து விழித்தெழுந்த உடனேயே அவர்கள் மேல் விழுந்த பாவத்தின் தழும்புகளிலிருந்து விடுபடமாட்டார்கள்.

அந்நேரத்தில் உலகின்மீது எந்தவொரு தெய்வீக அநுகூலமில்லா நிலை இருக்காது. ஏனெனில் மனிதனை விடுவிப்பதற்கான விலை அல்லது கிரயம் செலுத்தப்பட்டிருக்கும். ஆனால் ஆயிரவருட யுகத்தின் ஆரம்பத்தில் மனுக்குலத்தினுடைய வீழ்ச்சியின் விளைவாக ஏற்பட்ட கறைகள் இன்னும் இருக்கும். மனித இனத்தை மீண்டும் மீட்டெடுப்பதும் அபூரணத்தன்மையிலிருந்தும் பெலவீனங்களிலிருந்தும் அவர்களைத் தூக்கியெடுப்பதுமே அந்த யுகத்தின் வேலையாக இருக்கும். நீதியானது சரிக்கட்டப்பட்டிருப்பதால், விழுந்துபோன நிலையிலிருந்து மீண்டுவர மனிதனுக்கு உதவிசெய்யப்படும்.

தம்முடைய சொந்த ஜீவனை தியாகம்செய்து அவர்களை விலைகொடுத்து வாங்கிய கிறிஸ்துவின் கரங்களில் உலகமானது இருக்கும். நீதியைச் சரிக்கட்டியவுடன் அபூரணத்தன்மையிலிருந்து திரும்பக் கொடுத்தலாகிய ஆசீர்வாதங்களை மனுக்குலத்துக்கு கொண்டுவராது. மாறாக, இந்த நீதியை சரிக்கட்டுவது என்பது, தேவ தயவற்ற நிலையிலிருந்து, மீண்டும் தயவுக்கு திரும்பவே என்பதை மனதில் கொள்ளவேண்டும். இது தேவ தயவைப் பெறுவதற்காக மனிதருக்கான வாய்ப்பாக இருக்கும். ஆயிரமாண்டு அரசாட்சியின் முடிவில், தெய்வீக

## இம்மாத வெளியீட்டில்


.. ஆதாமுக்குள்ளான.. பாவத்துக்கு பிராயச்சித்தம் ... 1

.. பாவிகளின் சிநேகிதன் ... 6

.. *ஐசுவரியமுடையோரின் சிரமங்கள்* ... 10

.. *“நான்கு காற்றுகள்” கட்டவிழ்க்கப்படுதல்* ... 14



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

அங்கீகரிப்பைப் பெற தகுதியுள்ள நிலைக்கு இந்த நீதியைச் சரிக்கட்டுதலானது கொண்டுவரும்.

புதிய உடன்படிக்கையானது துவங்கப்படுவதற்கு முன்பே இந்த தெய்வீக நீதியைச் சரிக்கட்டுதல் நடைபெற வேண்டியதாகும். இது ஆதாமின் பாவத்தை மாத்திரம் சரிக்கட்டுவதற்காக அல்ல, மாறாக, ஓரளவு மனப்பூர்வமான பாவங்களுக்கான அடிகளையும் உள்ளடக்கியிருக்கும். மேலும் அவர்கள் ஒரு சிறந்த வாழ்க்கை வழிமுறையைப்பற்றி அறிந்தும், அநீதியான வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் தாங்களே பொறுப்பாளிகள் என அறிந்தும், அம்மனுக்குலம் செய்யும் பெரும் அநீதியான சில காரியங்களும் இந்த நீதியின் சரிக்கட்டுதலில் உள்ளடங்கியிருக்கும். ஓரளவுக்கு அவர்கள் அறியாமையில் இருந்தாலும், அடிக்கடி மனப்பூர்வமான தவறுகளை செய்துள்ளனர். எனவே அவர்களுடைய நடவடிக்கையினுடைய பொறுப்பின் அளவுக்குத்தக்கதான, நீதியின்படி ஒரு இழப்பீடு தேவைப்படுகிறது.

**யூத யுக கணக்கிடல்**

யூத யுகத்தின் முடிவில், தேவன் இஸ்ரயேல் தேசத்துடன் ஒரு கணக்கீட்டைக் கொண்டிருந்தார். அது, உலகம் அதுவரை அறிந்திராத மிக கொடிதான உபத்திரவக்காலங்களில் ஒன்றாக இருந்தது. அந்த யுகத்தைக் குறித்து அவருடைய காலத்தில் வாழ்ந்த சந்ததியினரிடம் இயேசு பிரகடனப்படுத்தும்போது, ஆபேலின் காலந்துவக்கி அவர் பேசுகின்ற காலம்வரை சிந்தப்பட்ட அனைத்து நீதிமான்களின் இரத்தப்பழிக்காக தேவன் பரிகாரம் தேடுகிறார் என்று அறிவித்தார் – மத்**23:34–36.**

“ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும், ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவையில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள். நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல், தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள். இவைகளெல்லாம் இந்தச் சந்ததியின்மேல் வருமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” – மத் **23:34–36.**

உலகின் இந்த ஓரளவு மனப்பூர்வமான பாவங்களானது பாவ நிவாரணங்களால் முற்றிலும் மூடப்படவில்லை. வேண்டுமென்றே செய்த பாவங்களைப் பொறுத்தவரையில், அவைகள் தண்டனைகளின் மூலமாகவே பரிகாரம் செய்யப்படும். இம்மாதிரியான பாவங்கள் மற்றும் மீறுதல்களையே திரள்கூட்டத்தாராகிய போக்காட்டின் மீது சுமத்தப்படுவதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஏற்படுத்தப்பட இருக்கிற மாபெரும் நிஜத்தில், உலகின் ஓரளவு வேண்டுமென்றே செய்த பாவங்களுக்காக, குறிப்பாக பாபிலோனின் பாவங்களுக்காக இவர்கள் துன்பப்பட அனுமதிக்கப்படுவார்கள். சுவிசேஷயுக தொடக்க முதல் தேவனுடைய பரிசுத்தவான்களின் இரத்தத்திற்காக, இதுவரை சம்பவித்திராத மகா உபத்திரவம் தற்போதைய தலைமுறைக்குத் தேவைப்படுகிறது.

கடந்தகால இரத்த சாட்சிகளாகிய “பலிபீடத்தின் கீழே இருக்கும் ஆத்துமாக்கள்”, “பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர்” என நீதி கேட்டு, அடையாளமாகச் சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள் என வெளிப் **6:9–11**இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தங்கள் சகோதரர்களில் மற்றவர்களும் இதேபோல் கொல்லப்படும்வரை காத்திருக்குமாறும், அப்போது அனைவரின் குற்றத்திற்காகவும் பழிவாங்கப்படும் எனவும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

“அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். அவர்கள் : பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும், தங்கள் சகோதரரு–மானவர்களின் தொகை நிறைவாகுமளவும்

இன்னுங்கொஞ்சக் காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது'' – வெளி 6:9–11.

**சுவிசேஷயுக கணக்கிடல்**

இந்தச் சுவிசேஷ யுக முடிவிலும் வேறு கணக்குகளும் நேர் செய்யப்பட வேண்டியிருக்குமென மேலே சொல்லப்பட்டவைகளிலிருந்து நாம் காண்கிறோம். உலகம் தோன்றினது முதல் இதுவரை சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான ஒரு மகா உபத்திரவம் கூடியவிரைவில் வரப்போகிறது(மத்24:21,22). இது வேதாகமத்தின் பல பகுதிகளில் பலமாக காண்பிக்கப்பட்டுள்ளது. நம்முடைய கர்த்தர் மாபெரும் நியாயாதிபதியாக மீண்டும் பிரசன்னமாகியிருக்கிறார். அவருடைய இராஜரீக பிரசன்ன நாளில் புயல் மேகங்கள் வெகு விரைவாக கூடிவருகின்றன.

சுவிசேஷயுகம் மற்றும் அதற்கு முந்தைய யுகம் ஆகிய இரண்டு யுகங்களின் அனைத்து தவறுகளுக்கும் ஏன் முழு பரிகாரம் அல்லது நிவர்த்தி தேவைப்படுகிறது ? அதாவது நீதிமானாகிய ஆபேலினுடைய இரத்தம் சிந்தப்பட்டது முதல், இந்த யுகத்தின் முடிவு காலங்களில் தற்காலம் வரைக்கும் சிந்தப்பட்ட இரத்தப் பழிகளுக்கு நிவர்த்தி அல்லது பரிகாரம் தேவைப்படுகிறதா ? என கேட்கப்படுகிறது. நம்முடைய பதில் என்னவெனில், ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் ஒரு பிரதான வெளிச்சம் வருகிறது. அந்த வெளிச்சத்திற்கு எதிராகப் பாவஞ்செய்தவர்கள், அந்த வெளிச்சம் வருவதற்கு முன்பாக, குறைவான வெளிச்சம் பெற்றிருந்து அதேவித தீமை செய்தவர்களைக் காட்டிலும் கடுமையான நியாயத்தீர்ப்புக்கு உள்ளாகிறார்கள். தற்கால வெளிச்சத்தில் கடந்தகால தவறுகளுக்கு ஒப்பீடு அளிக்கும்போது, அது பொறுப்புணர்வை பெருக்கி, ஒட்டுமொத்த வாதைகளையும் பெறத் தகுதியாக்குகிறது என்பதே வேதாகமம் கூறும் வாதமாகும்.

இன்றைய உலகில், குறிப்பாக கிறிஸ்தவ மண்டலத்தில் இந்த அக்கிரமங்களை அல்லது பாரபட்சங்களை நாம் பார்க்கவேண்டுமானால், அதைக் காண நாம் வெகுதொலைவில் இல்லை. தற்போது உலகம் முழுவதிலும் – குறிப்பாக அதன் நாகரீகமடைந்த பகுதியில் கணிசமான ஒளியானது பிரகாசிக்கின்றது. யூத நியாயப்பிரமாணத்தில் குறிப்பிட்டுள்ள நீதியின் கொள்கைகள், மேலும் அதனையடுத்து கர்த்தராலும் அப்போஸ்தலராலும் விஸ்தாரமாக்கப்பட்ட நீதி மற்றும் அநீதி, சரி மற்றும் தவறு, நன்மை மற்றும் தீமை குறித்தவைகள் பொதுஜனங்களின் மனதை பிரகாசமடையச் செய்துள்ளது. எனவே தற்போது வாழ்கிற சந்ததியினருடைய பொறுப்புணர்வைக் காட்டிலும் முன்பிருந்தவர்களிடையே ஒரு போதும் இருந்ததில்லை.

இந்த அறிவின் பெருக்கம் இருந்தபோதிலும், உலகெங்கிலும் ஒட்டுமொத்தமாக அக்கிரமங்களே நிலவுகின்றன என்றபோதிலும், உலக விவகாரங்கள், பொருளாதாரம், சமூக மற்றும் மதரீதியான மறுசீரமைப்பிற்கும், சமன்பாட்டிற்கும் எதையும் செய்ய ஒப்பீட்டளவில் வெகுசிலரே தயாராக உள்ளனர். மாறாக, அநுகூலங்களை பெற்றிருக்கிற பெரும்பாலானோர் அவைகளைத் தக்கவைத்துக் கொள்ளவே விரும்புகின்றனர். அவ்வாறு செய்வது பாரபட்சமானது மற்றும் அநீதியானது என உணர்ந்தாலும், அதையே செய்ய விரும்புகின்றனர்.

கடந்த காலங்களில் கர்த்தருடைய பரிசுத்த ஜனங்களுக்கு எதிராக செய்யப்பட்ட தீமைகளில் பெரும்பாலானவற்றிற்கு தரவேண்டிய தண்டனைகள் இன்னும் தரப்படாமல், தோல்வியடைந்த நிலைமையில் உள்ளதுபோல் நாம் உணருகிறோம். கிறிஸ்துவின் பெயரால் உண்மை சபையைத் துன்புறுத்திய மாபெரும் அமைப்புகள் நடைமுறையில் உள்ளன மற்றும் செழித்தோங்கியுள்ளன. ஆனாலும் அவைகளுடைய நீதியின் கூலியாகிய பலனை இன்னும் பெறவில்லை. அருகாமையில் இருக்கும் மகா பயங்கரமான உபத்திரக் காலத்தில் மகா பாபிலோன் ஒரு மாபெரும் எந்திரக்கல் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்படுவதுபோல் மூழ்கும். அந்த அராஜகமான காலத்தில் ஒவ்வொரு மனித கரமும் அவனுடைய அயலானுக்கு எதிராக இருக்கும். ''அக்காலங்களிலே வெளியே போகிறவர்களுக்கும் உள்ளே வருகிறவர்களுக்கும் சமாதானம் இல்லை'' – 2நாளா15:5.

**போக்காடு வகுப்பாரினாலான சட்டப்பர்வமான பிராயச்சித்தம்**

ஆனால் இந்த பாவங்களுக்கான சட்டப்பூர்வமான பிராயச்சித்தமானது போக்காடு வகுப்பாரால் நிறைவேற்றப்படவேண்டும் என்று நிழலில் காண்பிக்கப்பட்டதாக லேவியராகமம் 16:20–22 –ல் தெரிகிறது. இங்கு இஸ்ரயேல் ஜனங்கள் உலகத்தைக் குறிக்கிறார்கள். இந்தப் போக்காட்டின் நிஜத்தில், திரள்கூட்டத்தார் தனிமைப்படுத்தலாகிய வனாந்தரப் பகுதிக்கு அனுப்புதல் மற்றும் உபத்திரவப்படுதலை

குறிப்பிடுவதாக கர்த்தர் சித்தரிக்கிறார். இவர்கள் உடன்படிக்கைக்குப் பிறகு, தாமாக முன்வந்து பாளையத்துக்குப் புறம்பே கிறிஸ்துவின் நிபந்தனைகளை சுமக்க விரும்பாத வகுப்பார். அவர்கள் பாவநிவாரணத்தில் பங்கெடுப்பதில்லை, ஆனால் உலகின் மனப்பூர்வமான சில பாவங்களின் பாரத்தைச் சுமப்பதற்காக கட்டாயமாக அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறாக கர்த்தராகிய இயேசுவின் நாளில் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவன் இரட்சிக்கப்படும்பொருட்டு உலகத்திற்கு மரித்தவர்களாவார்கள்.

இந்த வகுப்பார், குறிப்பாக தற்காலங்களில், அதிக எண்ணிக்கையில் உள்ளனர். இவர்கள் இந்த மகா உபத்திரவக் காலத்தில் உபத்திரவப்படும்பொருட்டு, எதிராளியின் வசம் ஒப்படைக்கப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த உபத்திரவங்களில் உண்மையும் நேர்மையுமுள்ளவர்களாக இருப்பதினால், இவர்களும் ஜெயங்கொண்டவர்களாக கருதப்படுவதுடன், வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டபடி, வெற்றிச் சின்னமாகிய குருத்தோலைகளைப் பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்கெடுக்கவும், கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பாரின் கனமிக்க ஊழியராக இருக்கப்போகும் பாக்கியத்தையும் பெறுவார்கள். ஒருவேளை இவர்கள் தங்களுடைய வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுப்பதில் கீழ்ப்படியத் தவறுவார்களானால், இரண்டாம் மரணத்திற்குச் செல்வார்கள்.

இந்த மகா உபத்திரவக் காலத்திலிருந்து, உண்மையாக பலிசெலுத்துபவர்களாகிய கர்த்தருடைய ஆடாகிய சிறுமந்தை வகுப்பார் தப்பித்துக்கொள்வர். ஆனால் திரள்கூட்டத்தினரோ தப்பித்துக்கொள்ளாமல், அந்த உபத்திரவத்தில் பங்குபெறுவர். ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெளுத்தநிலைமையில், அவர்கள் இந்த உபத்திரவத்திலிருந்து மீண்டுவருவார்கள். அவர்களுடைய உபத்திரவங்கள் அவர்களுடைய வஸ்திரங்களை தூய்மைப்படுத்துவதில்லை, மாறாக அந்த உபத்திரவங்களின் மூலமாக, முன்பு ஒருபோதும் கற்றிராதவகையில், தேவ ஆட்டுக்குட்டியானவருடனான ஐக்கியத்தையும், அவருடைய ஒப்புரவாக்கும் புண்ணியத்தையும் மதிப்பிட கற்றுக்கொள்வர். மேலும் அந்த விசுவாசத்தினாலேயே தங்கள் சுத்திகரிப்புக்கு அதைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுவர். விரைவில் வரப்போகும் இந்த தேவபிள்ளைகளின் அனுபவங்களை நாம் கருத்தில் கொள்ளும்போது, கர்த்தர் மீதான நமது அன்பை இன்னும் அதிகமாக வெளிப்படுத்துவோமாக. எல்லாவற்றிற்கும் மேலாக, நமது இராஜாவின் ஊழியத்திலும், விசுவாச வீட்டாருக்கான ஊழியத்திலும் நம்முடைய ஜீவியங்களை உண்மையாகவே கொடுக்க நாம் எல்லோரும் வாஞ்சிப்போமாக.

**இயேசு மாத்திரமே மீட்கும் பொருளாவார்** (Jesus alone the Ransomer)

போக்காடு வகுப்பார் பாவ நிவர்த்தி செய்வார்கள் எனவும், அதினால் மனுக்குலத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதி ஜனங்கள், பிரேதக் குழிகளிலிருந்து கொண்டுவர சாத்தியமாகும் என கூறுவது சரியானதல்ல. பிரேதக்குழியானது ஆதாமின் மீறுதலுக்கான தண்டனையைக் குறிப்பதுடன், அத்தண்டனையானது ஆதாமின் குழந்தைகள் அனைவராலும் சுதந்தரிக்கப்பட்டுள்ளது. ''ஒரே மனுஷனாலே பாவமும் (கீழ்ப்படியாமையும்) பாவத்தினாலே (பாவத்தின் பலனாக) மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும்... மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று'' என அப்போஸ்தலர் கூறுகிறார்.– ரோமர் 5:12.

இயேசுவின் மரணம் மட்டுமே ஆதாமின் பாவத்தை இரத்து செய்யமுடியும். அவர் ஒருவரே மீட்பரும், மீட்கும்பொருள் தருபவருமாவார். தகப்பனாகிய ஆதாமின் ஜீவனுக்காக அவர் தம்முடைய ஜீவனைத் தந்தார். இவ்வாறு முழு உலகத்தின் பாவங்களைச் சரிக்கட்டுகிறவரானார். இயேசு தம்முடைய சரீர அங்கத்தினர்களாக யாருக்கு பரிந்துபேசுகிறாரோ அவர்கள் அவரோடு இணைந்து அவரோடுகூட அவருடைய ஊழியத்தில் அடையாளங் காணப்படுவார்கள். அது அவர்களின் சொந்த தகுதியினால் அல்ல, மாறாக ''பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டதினால்'' அவ்வாறு இருப்பார்கள். இவர்கள் தங்களுடைய தலையானவரோடுகூட இணைந்திருப்பதனால், ''உலகத்தின் பாவத்தை'' நீக்குவதில் செயல்படமுடியும் என வேதாகமத்தின்படி காண்பிக்கப்படுகிறது. உலகத்தின் பாவத்தை நீக்குவதற்கு திரள்கூட்டத்தார் யாதொன்றையும் பெற்றிருக்கவில்லை.

**வெளிச்சத்துக்கு விரோதமான பாவங்களுக்கான பொறுப்பு** (Responsibility for sins against light)

“உலகத்தின் பாவம்” (யோவான் 1:29) என்பது ஆதாமின் பாவம். ஆனால் ஆதாமுக்குள்ளான பாவத்தைத் தவிர வேறு பாவங்களும் உள்ளன. அவை வீழ்ச்சியினால் மனுக்குலத்தின்மீது கொண்டுவரப்பட்டவைகளாகும். ஒவ்வொரு யுகத்திலும் வெளிச்சத்துக்கு விரோதமான ஓரளவு பாவங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என நாம் கருதலாம். ஆனால் அந்தப் பாவிகள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாததால், வெளிச்சத்துக்கு விரோதமான அவர்களுடைய பாவங்களானது இரண்டாம் மரணத்திற்கு அவர்களை உட்படுத்தாது.

ஆயினும், எந்த விகிதத்தில் அவர்கள் வெளிச்சத்தையும் அறிவையும் பெற்றிருந்தார்களோ, அந்த அளவிற்கு பொறுப்பும் இருந்தது. மரித்த அனைவரும் கல்லறையிலிருந்து திரும்பிவருவதற்கும், பரிபூரணமான ஜீவனைப் பெறுவதற்குமான ஒரு வாய்ப்பை அடையும்பொருட்டு இயேசு மரித்தபோதும், வெளிச்சத்துக்கு விரோதமான தனிநபர்களின் பாவத்துக்காக அவர் மரிக்கவில்லை. அத்தகைய பாவங்களுக்கு தனிநபரே பொறுப்பாளியாவார்.

சபை வகுப்பாரைப் பொறுத்தவரையில், மனப்பூர்வமாக தீமை செய்பவர்கள் ஜீவனிலிருந்து துண்டிக்கப்படுவார்கள். அவர்களுடைய ஆவி இரட்சிக்கப்படும்படிக்கு மாம்சத்தின் அழிவிற்காக சிலர் சாத்தானிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று அப்.பவுல் கூறுகின்றார். மனப்பூர்வமான ஒவ்வொரு பாவத்திற்கும் – யாரால் எப்போது செய்யப்பட்டாலும், சிட்சைகள் அல்லது பாவியின் மரணத்தால் பதிலளிக்கப்படவேண்டும்.

**கிறிஸ்துவின் பலியினால் மூடப்படாத பாவங்கள்**(Sins not covered by Christ’s sacrifice)

கிறிஸ்துவின் மரணமானது ஆதாமின் பாவத்தைத் தவிர வேறொன்றையும் நிவர்த்தி செய்வதற்கல்ல. ஆனால் வெளிச்சத்திற்கெதிரான பாவங்கள் நேரடி பொறுப்பின் கீழான, மற்ற பாவங்களாயிருந்து, அவை சரிசெய்யப்படவேண்டும். பழைய காலங்களில் தேவனுடைய பிள்ளைகளுக்குக் கசப்பான உபத்திரவங்கள் இருந்தன. அப்படி துன்புறுத்தப்பட்டவர்கள், பூமியின் குகைகளிலும், கெபிகளிலும் குடியிருக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தனர்(எபிரேயர்11:32–30). இவர்களுடைய மீறுதல்கள், அவர்கள் வெளிச்சத்திற்கெதிராக செய்த விகிதாச்சாரத்துக்கேற்ப, மீறுதலுக்குட்பட்டவர்களால் சரிக்கட்டப்படவேண்டும்.

யூதயுகத்தின் முடிவில் யூத ஜனங்களுக்கு எதிரான கணக்கை. தேவனுடைய வழிநடத்துதலின்படி நேர்செய்யப்பட்டது. உச்சகட்ட கோபாக்கினையானது அந்த ஜனங்கள்மேல் வந்தது. நாம் புரிந்துகொண்டபடி கிபி 70ல் அவர்களுடைய கணக்குகள் நேர்செய்யப்பட்டு, முடிவடைந்தன. மற்ற தேசங்களைப் பொறுத்தவரையில், தேவன் இதற்கொத்த வழிகளைக் கையாண்டிருந்தாலும், துல்லியமாக அதேபோல கையாளப்படவில்லை. ஏனெனில் இஸ்ரயேல் ஜனங்களைப்போல, அவர்கள் அவருடனான உடன்படிக்கையின் உறவில் இல்லை.

சுவிசேஷ யுகத்திற்கு வரும்போது, ஓரளவு வெளிச்சத்திற்கும் ஞானத்திற்கும் விரோதமாகச் செய்த அநேக பாவங்கள், கிறிஸ்துவின் பலியினால் எந்த வகையிலும் மூடப்படாது. போதகரின் வார்த்தைகளின்படி எல்லா பாவங்களிலும் பிரதானமான பாவமானது, அவருடைய ஜனங்களுக்கு விரோதமாக செய்யப்படுபவைகளாகும். அவர் கூறும்போது, அவரிடத்தில் விசுவாசமுள்ள சிறியரில் யாருக்காவது இடறலுண்டாக்கினால், அவர் தண்டிக்கப்படவேண்டும். அதேபோல், அவர்களில் யாருக்காவது “ஒரு கலசம் தண்ணீரை” யார் கொடுக்கிறார்களோ, அவர்கள் அதற்குரிய பலனை அடைவார்கள் – மத்தேயு 18:6; 10:42.

இருண்ட யுகங்களில் பரிசுத்தவான்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி நாம் வாசித்தோம். அவர்கள் கீல் கொண்டு பூசப்பட்டு எரிக்கப்பட்டனர். காட்டு மிருகங்களுக்கு உணவாயினர். அவர்களுடைய சரீரங்கள் துண்டுதுண்டாகக் கிழிக்கப்பட்டன. அவர்கள் எண்ணற்ற வழிகளில் சித்திரவதை செய்யப்பட்டனர். இம்மாதிரியான கொடுமைகளைச் செய்தவர்களுக்குரிய தண்டனைகள் நிலுவையில் உள்ளன என நாம் உறுதியாக நம்புகிறோம். ஆனால் காலத்துக்கு முன்பே தீர்ப்பு செய்யவேண்டாமென கர்த்தர் நம்மிடத்தில் கூறியிருக்கிறார். ஏற்ற காலத்தில் நாம் உலகத்தின் நியாயாதிபதிகளாக ஏற்படுத்தப்படுவோம். இப்போது நாம் கர்த்தரை நோக்கினவர்களாக, அவருடைய நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருப்போமாக.

**நிஜமான போக்காடு**(The antitypical scape goat)

யூதர்களுக்கு தீர்வுக்காலம் எவ்வாறு கிபி 70 – இல் உச்சத்தை அடைந்ததோ, அவ்வாறே கிறிஸ்தவ தேசங்கள்

என்று கூறிக்கொள்பவர்களுக்கும்கூட ஒரு தீர்வுக்காலம் இருக்குமென்று வேதவசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. எந்தளவிற்கு அவர்கள் தங்களை அநீதிக்கு உட்படுத்தினார்களோ, எந்தளவிற்கு வெளிச்சத்திற்கு விரோதமாக அவர்கள் பாவம் செய்தார்களோ, அவர்களே பொறுப்பாளியாவார்கள். அவர்களின் பொறுப்புணர்வின் அளவை நாம்அறியோம், தேவன் அறிவார். ஆனால் புதிய யுகமானது எல்லாக் கணக்குகளிலிருந்தும் விடுபட்டிருக்கவும், மனுக்குலத்திற்கு விதிக்கப்பட்ட இம்மாதிரியான எதுவும் இராதபடிக்கும், இந்த உபத்திரவக் காலத்திலேயே இந்தக் காரியங்கள் அனைத்தையும் அவர் நேர்செய்திடுவார். தேசமாக செய்யப்படும் பாவங்கள் தேசிய அளவில் நிவர்த்திசெய்யப்படும். மேலும் நிச்சயமாக, தனிநபர்கள் தவறான செயல்களால் துன்புற்றதைப்போல, பிராயச்சித்தம் செய்யும்போது தனிநபர்கள் துன்புறுவார்கள்.

அப்படியானால், உலகம் ஒரு புதிய துவக்கத்துடன் வெளிவரும்படியாக, தாம் இரத்துசெய்ய விரும்பும் அநீதியை, பிதாவாகிய தேவன் எவ்வாறு கணக்கிடுவார் ? அந்த உபத்திரவத்தில் திரள்கூட்டத்தாருக்கு ஒரு பங்கு இருக்குமென்று நாம் பதிலளிக்கிறோம். உண்மையிலேயே அவர்கள் உபத்திரவத்தில் ஒரு பங்கைப் பெறத் தகுதியற்றவர்கள் என்பதால் தெய்வீக கோபத்துக்குத் தகுதியடைந்தனர் என்கிற அர்த்தத்தில் அவர்கள் அனுபவிக்கும் உபத்திரவமானது, ஒரு அளவுக்கு, அதின் புண்ணியம் மற்றவர்களுக்குச் செல்லும்வகையில் இருக்கும். திரள்கூட்ட வகுப்பாரில் பங்கடைவதென்பது தண்டனை அல்ல, மாறாக திரள்கூட்ட வகுப்பார் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட வகுப்பார் ஆவார்கள். அவர்கள் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதில்லை. மாறாக சிங்காசனத்திற்கு முன்பாக ஊழியம் செய்வார்கள். மேலும் அவர்கள் திவ்ய சுபாவத்தைப் பெற்றிருப்பதுமில்லை. சிறுமந்தை வகுப்பாரோ இராஜ்யத்தில் உடன் சுதந்திரர்களாக எஜமானருடன் இணைந்திருக்கும் மாபெரும் பரிசினைப் பெற்றிருப்பார்கள். மற்ற வகுப்பாரோ, அதனினும் கீழான ஆவிக்குரிய தளத்திற்கான பரிசினை பெறுவார்கள். ஏனென்றால் அவர்களும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தனர்.

திரள்கூட்டத்தாரைப் பொறுத்தவரையில், இந்த யுகத்தின் முடிவில் வரும் உபத்திரவத்தில் பங்கெடுக்க தேவன் அவர்களை அனுமதிப்பதென்பது அவர்களின் சொந்த வளர்ச்சிக்காகவே இருக்கும். அவர்களுடைய உடன்படிக்கையானது மரணபரியந்தமானதாக இருந்தது.மேலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதில் அவர்கள் தங்கள் ஜீவனை இழக்காவிட்டால் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்கள் என்பதை அவர்கள் நிரூபிக்காவிட்டால், அவர்கள் எந்தத் தளத்திலும், எந்தவொரு ஜீவனுக்கான நிலைக்கும் தகுதியடையமுடியாது. எனவே வருங்காலத்தில் அவர்கள் உபத்திரவப்படுவது, அவர்களின் சொந்த தனிப்பட்ட நன்மைக்காகவே இருக்கும். நிஜமான போக்காடாக அவர்கள், உலக ஜனங்களின் அக்கிரமங்கள், பாவங்கள் மற்றும் மீறுதல்களுக்காக உபத்திரவப்படுவார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது (லேவியராகமம் 16:21,22, ஆசரிப்புக்கூடார நிழல்கள் புத்தகம், தமிழில் பக்கங்கள் 74–79; ஆங்கிலத்தில் பக்கங்கள் 68–72ஐக் காணவும்). திரள்கூட்டத்தாரின் அந்தத் தகுதியை பிரயோஜனமற்றதாக விட அனுமதிக்காமல், துணிகர பாவங்களுக்கான உலகத்தின் கணக்கினைச் சமநிலைப்படுத்தும் விதமாக, கர்த்தர் அதைப் பிரயோஜனப்படுத்திக்கொள்வார்.

––––––––

## R 5464

## “பாவிகளின் சிநேகிதன்”

## “THE FRIEND OF SINNERS”

**ஆதார வசனங்கள் : லூர்க்கா 18:9–14; 19:1–10.**

**திறவுகோல் வசனம்: மாற்கு 2:17 “நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்”**

நமது கர்த்தர் தமது உவமைகளில் மூலம் பிரதானமாக, பரிசேயர்கள் மற்றும் ஆயக்காரர்களையே சுட்டிக் காண்பித்தார். ஏனென்றால் சதுசேயர்கள் வேத வாக்கியங்களை விசுவாசியாமலும், பயபக்தியாய் எதிர்கால வாழ்வினை எதிர்பார்க்காமலும் பெயரளவில் யூதர்களாய் இருந்தனர். பரிசேயர்கள் பாரம்பரியவாதிகளாயிருந்து, நியாயப்பிரமாணங்களை பயபக்தியோடு மதித்து, அதை ஜனங்களுக்குக் கற்பித்தார்கள். வெளித்தோற்றத்தில் அவர்கள் மிகவும் சரியானவர்களாயிருந்தனர். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர்க்கு மதம் ஓர் சடங்காச்சாரமாகவும், நியாயப்பிரமாணத்தை வெளிப்புறமான கீழ்ப்படிதலாக கடைப்பிடித்தனர், இருதயத்தில் அல்ல என்று இயேசு பல்வேறு உவமைகளில்

சுட்டிக் காட்டியுள்ளார். ஆயக்காரர்கள் பரிசுத்தத்தை வெளிப்படையாய் காண்பிக்கவில்லை.அதற்கு மாறாக, தேவனிடத்திலிருந்து தூரம் சென்றவர்களாகவும் அவரது நியாயப்பிரமாணங்களுக்கு இசைவில்லாதிருப்பதாகவும் அறிக்கையிட்டனர்.

பரிசேயர்கள் ஆயக்காரர்களை, புறஜாதியாரைப்போன்று நடத்தினர், அவர்களுடன் சேர்வதுமில்லை அவர்களுடன் உணவருந்துவதுமில்லை. பரிசேயர்கள் இயேசுவை பின்பற்றத்தக்கவராகவும், அவரது போதனைகள் உயர்ந்த கேட்பாடுகளுக்கு முழு இணக்கமாயும் இருப்பதை அங்கீகரித்தனர். ஆகவே அவர் அவர்களுடன் இணையாததைக் குறித்தும், அதே நேரத்தில் பாவிகளென்று அறிக்கையிட்ட ஆயக்காரர்களுடன் ஐக்கியம் வைத்திருந்ததைக் குறித்தும் வியந்தனர்.

காரியத்தின் இரகசியம் என்னவென்றால், இயேசு வெளித்தோற்றத்தையல்ல, இருதயத்தையே பார்த்தார். ஆயக்காரர்கள் பாவிகளாய் இருந்ததினால் அவர்களிடம் அன்பு செலுத்தவுமில்லை, பரிசேயர்கள் வெளித்தோற்றத்தில் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதால் அவர்களை புறக்கணிக்கவும் இல்லை. வாலிபனாகிய பரிசேயன் ஒருவன் இயேசுவிடம் வந்த சம்பவத்தை நாம் நினைவுகூறுவோம், நியாயப்பிரமாணத்தைக் குறித்து கேள்வி கேட்கப்பட்டபொழுது அவன் கூறியதாவது ; “இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். மேலும் நாம் வாசிக்கும்போது, “இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்தார், அவன் உண்மையுள்ள பரிசேயனாய் இருந்தான்.

நம் பாடத்திலுள்ள உவமை இவ்விஷயத்தை விளக்குகிறது. சில பரிசேயர்கள் மற்றும் புறக்கணிக்கப்பட்டிருந்த சில ஆயக்காரர்களின் இருதய மனப்பான்மையை இது நமக்குக் காண்பிக்கின்றது. இரு மனிதரும் ஜெபிக்கும்படி தேவாலயத்துக்குச் சென்றனர், ஒருவன் தான் ஜெபிக்கும்போது, நான் பாவியாய் இராததினாலும், அநேகரைப்போன்றும் இந்த ஆயக்காரனைப்போன்றும் இராததினால் ஸ்தோத்தரிக்கிறேன். நான் பரிசேயனானபடியால் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன் – ஏனென்றால் தான் நீதிமானென்று தன் இருதயத்தில் சொல்லிக்கொண்டான். ஆனால் அந்த ஆயக்காரனோ, வேறுபட்ட உணர்வு கொண்டிருந்தான். பாவத்தின் பாரம் அவனிடமிருந்தது. “கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே ! பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும் என்று கூக்குரலிட்டான்.

தேவனுடைய பார்வையில் இருவருமே பாவிகளாயிருந்தனர். இருவருக்குமே பாவ மன்னிப்பு தேவைப்பட்டது. ஆனால் ஒருவர் தன் சொந்த அபூரண கிரியைகளின்மீது நம்பிக்கை வைத்திருந்து, அவரிடம் மன்னிப்பு கேட்கவில்லை. மற்றவரோ, தன் குறைகளை உணர்ந்து, இரக்கத்திற்காக விண்ணப்பம் செய்தார். இதன்மூலம் தேவனுடைய கற்பனைகளுக்கு இசைவாக வாழ, தன் சிறந்த ஆற்றலை வெளிப்படுத்த முயற்சிப்பவர்களைக் காட்டிலும், பாவத்தில் வாழ்பவர்கள்மீது தேவன் அதிகம் பிரியப்படுகிறார் என்ற கருத்துப்பதிவு நமக்கு வந்துவிடக்கூடாது. இங்கு கூறப்படும் படிப்பினை அதற்கு மாறானது. நாம் அனைவரும் பூரணத்தில் குறைவுபட்டுள்ளோம் என்பதையும், நமக்கு தெய்வீக இரக்கம் தேவை என்பதையும் நாம் உணரவேண்டும். தன் குறைகளைக் காணத்தவறும் நல்லொழுக்கமுடைய நபரைக் காட்டிலும், அதை உணரும் பாவியின் பேரிலேயே தேவன் பிரியப்படுகிறார், மன்னிப்பை அடைவதற்கு அவரே அருகாமையிலும் இருக்கிறார்.

வேறொரு சமயத்தில் பரிசேயர்களின் இதே தவறைக் குறித்து இயேசு குறிப்பிடுகையில், “பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை, நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்”. இந்த வார்த்தைகளின் மூலம், பரிசேயர்கள் தங்களை நீதிமான்கள் என்று கூறிக்கொண்டாலும், உண்மையில் அவர்கள் அப்படியல்ல என்ற உண்மையை அவர் சுட்டிக்காட்டினார். அவர்கள் பாவத்தினால் நோயுற்றிருந்த அபூரணர்களாயிருந்ததினால், ஒரு இரட்சகர் தேவைப்பட்டார். ஆனால் இயேசுவால் மாத்திரமே கொடுக்கக்கூடிய பரிகாரமாகிய பாவ மன்னிப்பை, பாவ வியாதியிலுள்ள அவர்களும், விழுந்துபோன மற்ற அனைத்து மனுக்குலமும் உணர்ந்து, அதற்கு கர்த்தரிடத்தில் வரவேண்டும் என்பதன் அவசியத்தை கற்காதவரையில், தங்கள் தேவையை உணரும் நிலையை அடையமாட்டார்கள்.

தங்களது தேவையை உணராததினால் பரிசேயர்கள் இயேசுவிடம் வரவில்லை, அவரது சீஷராகவுமில்லை, அதினிமித்தம் அவர்கள் மாபெரும் ஆசீர்வாதத்தை தவறவிட்டனர். அதற்கு மாறாக, இயேசுவை

பின்பற்றினவர்களில் பெரும்பாலானோர், ஆயக்காரரும் பாவிகளும் – முறையான வாழ்க்கை வாழாதவர்களும், ஆனால் தங்கள் பிழைகளை ஏற்றுக்கொண்டு அவைகளிலிருந்து திரும்பி, நல்ல வைத்தியரின் மன்னிப்பையும், குணமாக்குதலையும் ஏற்றுக்கொண்டனர்.

**நமது நாட்களில் பரிசேயர்கள்**

உலகத்திலுள்ள கிறிஸ்தவர்கள் மத்தியில் இவ்விரு வகுப்பினரும் இன்னும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். சிலர் தங்கள் சபை உறுப்பினருக்கான அடையாளத்தின்மீது நம்பிக்கை வைத்து, தங்கள் பொதுவான நல்லொழுக்கத்தையும், உதாரத்துவ குணத்தையும் சார்ந்திருந்து, அனைவரும் பாவிகள் என்பதையும், சிலுவையில் அறையப்பட்டவரை விசுவாசிப்பதினாலேயே பாவமன்னிப்பு உண்டு என்பதையும் மறந்துவிடுகின்றனர். மதம் தொடர்புடைய காரியத்தில் நாட்டம் கொள்ளாத மற்றவர்கள், தங்கள் சொந்த பெலவீனத்தை உணர ஆயத்தமாயும், தங்கள் பாவத்தை அறிக்கையிடவும், அதற்கான மன்னிப்பை ஏற்றுக்கொள்ளவும், கல்வாரியின் பலியை அடித்தளமாகக்கொண்ட தேவனுடைய இலவச ஈவுகளையும், நித்தியஜீவனையும் பெற தயாராயிருக்கின்றனர். இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட வகுப்பார், மற்றவர்களைக் காட்டிலும் ஒவ்வொரு வழியிலும் அனுகூலமடைந்து, கிறிஸ்துவோடுகூட அவரது இராஜ்யத்தில் உடன் சுதந்திரராகும் தெய்வீக அங்கீகாரத்தை அடைவார்கள் என்று உறுதியாய் நம்பலாம்.

நம் அனைவருக்குமான பொதுவான பாடம், அப்போஸ்தலர் யாக்கோபு மற்றும் பேதுருவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. “பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால் ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். “நீங்கள் பின்பற்ற விரும்புகின்ற சிலுவையில் அறையப்பட்டவரின் புண்ணியத்தின் மூலம், இறுதியான வெற்றியும் நித்திய ஜீவனும் பெற உங்கள் பாவங்களை அறிக்கை செய்து, அவைகளுக்கு எதிராக தைரியமாகப் போரிட்டு, மீட்பிற்காக நம்பிக்கையுடன் இருங்கள்.

**சிறியவன் – பெரிய இருதயம்**

நமது பாடத்தின் பிற்பகுதி, இயேசுவின் சிலுவை மரணத்திற்கு சற்று முன்னர், எரிகோவிலிருந்து எருசலேம் வரையிலான அவரது பயணத்தோடு தொடர்புடையது. பஸ்கா பண்டிகையை அனுசரிக்க பெரும் திரளானோர் அதே திசையிலேயே பயணித்தனர். எப்போதும் போலவே, அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் மையமாக இயேசு இருந்தார். “அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை” என்று நாம் அவரைக்குறித்து படிப்பதுபோன்று, அனைவரும் அவரைக் காணவும் அவரது பேச்சைக் கேட்கவும் விரும்பினர்.

அந்த பிராந்தியத்தில் செல்வந்தனாக இருந்த சகேயுவும் இயேசுவைக் குறித்து அநேகமானவைகளைக் கேள்விப்பட்டுள்ளதால், அவரைக் காணவேண்டும் என்று ஆவலுடன் இருந்தார். அவர் ஒரு பரிசேயன் கிடையாது, வெளிப்படையான பரிசுத்த ஜீவியம் ஜீவிப்பவனும் கிடையாது. பரிசேயர்களால் ஒதுக்கப்பட்டு, ஆக்கினைக்கு தீர்க்கப்பட்டவர்களுள் ஒருவனாக இருந்தான்.ரோம அரசாங்கத்திற்கு அலுவல் வேலை செய்கிறவனாய் இருந்தான். ரோமர்களுக்கு வரிவசூல் செய்கின்ற ஆயக்காரனாய் இருந்தான். இதனிமித்தம் அவன் புறக்கணிக்கப்பட்டவனாயும் யூத மத நம்பிக்கைக்கு புறம்பானவனாகவும் கருதப்பட்டான்.

சகேயு தான் குள்ளமானவனாக இருந்தபடியால், மக்கள் கூட்டத்தின் நிமித்தம் இயேசுவைக் காணக் கூடாதவனாய் இருந்தான். ஆகவே அவன் முன்பதாக ஓடி காட்டத்தி மரத்தின் மீது ஏறி, இயேசு அவ்வழியே செல்லும்போது அவரது தோற்றத்தை நன்கு காணவேண்டும் என்றிருந்தான். ஆண்டவர் அவனை அறிவார் என்றும், அவனது இருதயத்திலுள்ள நேர்மையை அவர் உணர்ந்துகொள்வார் என்பதையும், அதினிமித்தம் அவன் பெரிதும் மேன்மைப்படுத்தப்படுவான் என்பதையும் அவன் கொஞ்சமும் உணராதிருந்தான். சகேயு இருந்த இடத்திற்கு இயேசு வந்தபோது, அவர் ஆயக்காரனை நோக்கி அவனது பெயரைச்சொல்லி அழைத்து, உடனடியாக கீழே வரவேண்டும் என்றும், அவனது வீட்டில் விருந்தாளியாக அவர் தங்கவேண்டும் என்பதையும் கூறினார். சகேயு அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார். இந்த சூழல்கள் அனைத்தும் பரிசேயர்களுக்கு பெரியஅளவில் வெறுப்பை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நாம் நிச்சயித்துக்கொள்ளலாம். யூதப் பாரம்பரியம் இல்லாத ஒருவனுடன் இயேசு விருந்தாளியாக தங்குவதைக் குறித்து அவர்கள் முறுமுறுத்தனர்.

அவர்களது முறுமுறுப்பு சகேயுவின் செவிகளிலும் தெளிவாக விழுந்தது. அதுமுதல், அவன் கர்த்தரிடம் தற்பாதுகாப்பு குறித்து உரையாடினான். அவனுக்கெதிரான இந்தக் குற்றச்சாட்டுக்கள் இயேசு தன் விருந்தாளியாய் வருவதைத் தடுத்துவிடக்கூடாது என்றும், அவன் எப்படி இருக்கவேண்டும் , எப்படி இருக்கமுடியும் என்ற, அவனது உள்ளத்தின் விருப்பங்களையும் வெளிப்படுத்த ஆவலாய் இருந்தான். “என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக்

கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்''. இப்படியாக சகேயு தேவனிடத்திலான பக்தியையும், நீதியையும், இயேசுவை அவரது கர்த்தராகவும் போதகராகவும் ஏற்றுக்கொள்வதையும் வெளிப்படுத்தினான்.

இயேசு இவை அனைத்தையும் எப்படி ஏற்றுக்கொண்டார்? அவர் சகேயுவுக்கு மறுமொழியாக,'' இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாய் இருக்கிறானே'' என்றார். கர்த்தருடைய பார்வையில் ஆபிரகாமின் சந்ததியினர் அனைவரும் சீஷராகும் தகுதியுடையோராயிருந்தனர். அபூரணத்தை நேர்மையுடன் ஒப்புக்கொள்வதும், பாவத்திலிருந்து விலகுவதும், கிறிஸ்துவை முழுஉள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு, அவரது அடிச்சுவடுகளை பின்பற்ற முயற்சிப்பதுமே, தேவையான காரியங்களாயுள்ளன.

மனிதர்கள் என்ன சிந்தித்தாலும் அல்லது மாற்றுக்கருத்து கூறினாலும் , இதே கொள்கை எவ்வித கேள்விக்கும் இடமின்றி இன்றும் பொருந்துகிறது. மனந்திரும்புபவர்களை ஏற்றுக்கொள்ள கர்த்தர் சித்தமுடையவராய் இருக்கிறார். இயேசுவின் சீஷராக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமானால், மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியினராய் இருக்கவேண்டிய அவசியம் இனியும் இல்லை. அப்போஸ்தலர் பவுல் விவரிப்பதுபோன்று, யூதருக்கும் புறஜாதியாருக்குமிடையே பிரிவினையை ஏற்படுத்தும் தடுப்புச்சுவர் தகர்க்கப்பட்டுள்ளது. தெய்வீக திட்டத்தின் அடிப்படையில் இயேசுவின் சீஷராக, ஆபிரகாமின் விசுவாசத்தையுடைய அனைவரும், அவரது பிள்ளைகளாக எண்ணப்படுகின்றனர்.

நம் கர்த்தருடைய வார்த்தைகளுடன் நமது பாடம் நிறைவுறுகிறது.''இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார். ஆதாம் பரிபூரணராக சிருஷ்டிக்கப்பட்டார் என்பதை மறுக்கின்ற சிலர், அவர் தெய்வீக அனுக்கிரகத்திலிருந்தும் வீழ்ந்தார் என்பதையும், இயேசுவின் மூலமான மீட்பு அவசியம் என்பதையும் மறுக்கிறார்கள். இவர்கள் தங்கள் கருத்துக்களை நிலைநாட்ட, ஆதியாகமத்தில் அவைகள் குறிக்கப்பட்டிருப்பினும் அப். பவுலும் மற்ற அப்போஸ்தர்களும் அவைகளைக் குறிப்பிட்டிருப்பினும், இயேசு விழுதலைக் குறித்து ஏதும் குறிப்பிடவில்லை என்கின்றனர். ஆனால் தாம் எதற்காக இந்த உலகத்திற்கு வந்தேன் என்பதை அவரே இந்த வாக்கியங்களில் கூறியுள்ளார். எதிராளியின் திட்டங்களுக்கு உதவிட அவர் உலகத்திற்கு வரவில்லை. ஆனால் அவர் சொன்னபடி – மனிதனுடைய மீட்பராக, இழந்துபோனதைத் தேடவும் சீர்ப்படுத்தவும், திரும்பக்கொடுக்கவும், இந்த உலகத்திற்கு வந்தார்.

நித்திய ஜீவன் இழக்கப்பட்டது, ஏதேன் இழக்கப்பட்டது, மனித பரிபூரணம் இழக்கப்பட்டது, தெய்வீக குணலட்சணத்தின் சாயல் இழக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் சாபமாகிய மரண தண்டனையின் கீழ் உள்ளதால், இவைகளை மனுக்குலத்தினால் திரும்பப் பெறமுடியாது. தேவனுடைய பரிவிரக்கம் ஓர் திட்டத்தை வகுத்தது, அதன்படி இயேசு இந்த உலகத்திற்கு வந்து அனைவருக்குமான மீட்கும்பொருளாக தம்மையே கொடுத்தார்.

தனது பணி மீட்கும் பொருள் கொடுப்பதாகும் **(மத் 20:28)** என்ற உண்மையை நம் ஆண்டவர் கூறியது, மனிதன் மரணத்தீர்ப்பின்கீழ் உள்ளான் என்பதையும், அதினின்று மீட்கப்படவேண்டியது அவசியம் என்ற கூற்றை உறுதிப்படுத்துகிறது. மீட்கும்பொருள் இன்றி மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லை, வருங்கால ஜீவன் இல்லை. வேதத்தை மட்டும் பேச நாம் அனுமதிக்கும்போது, அவை சீராயும், ஒன்றோடொன்று இசைவாயுமிருக்கும். அவை தெய்வீக வழிநடத்துதலினால் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் என்பதை நிரூபிக்கின்றன.

### இரண்டு இரட்சிப்புக்கள் – ஒரு இரட்சகர்

மனுக்குல சந்ததி ஒன்றாக இருப்பினும், அனைவரும் ஒரே மரண தண்டனையைப் பகிர்ந்து கொண்டபோதிலும், இந்த மரண சாபத்தினின்று இரண்டு வேறுபட்ட இரட்சிப்புகள் அருள்வது தேவனுக்குப் பிரியமாய் இருந்தது. இரு இரட்சிப்புக்களும் கல்வாரியில் இயேசு நிறைவேற்றிய மாபெரும் தியாகத்தின் அடிப்படையிலானது. இந்த இரண்டு இரட்சிப்புக்களில் முதலாவது சபை வகுப்பாருக்குரியது, இவர்கள் இந்த சுவிசேஷயுகத்தில் உலகத்தினின்று அழைக்கப்பட்டவர்கள்.மனித சுபாவத்தினின்று ஆவிக்குரிய சுபாவத்திற்கு –சுபாவ மாற்றமடைவதற்கு அழைக்கப்பட்டவர்கள். இந்த முதல் இரட்சிப்பு இன்னும் முடிவடையவில்லை, உலகத்தினின்று ஒட்டுமொத்த இந்த சபை வகுப்பாரும் தெரிந்தெடுக்கப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலில் கிறிஸ்துவுடன் மகிமையடையாத வரையில்,அது முடிவடைவதில்லை. இவர்கள் கிறிஸ்துவுடன் அவரது ராஜ்யத்தில் உடன்சுதந்திரராய் இருப்பார்கள். அந்த ராஜ்யம் மீதமுள்ள மற்ற உலகத்தினருக்கான அதன் பணிகளை, அவர்கள் சார்பாக செய்யும்.

இரண்டாம் இரட்சிப்பு ஆயிரமாண்டு உலகத்திற்குரியது. அந்த யுகத்தில் மேசியாவின் இராஜ்யம் இந்த உலகத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும், மேலும் சாத்தான் கட்டப்பட்டிருப்பான். அதன்பிறகு பூமி கர்த்தரை அறியும் அறிவினால் நிறைந்திருக்கும். அப்போது குருடான கண்கள் யாவும் திறக்கப்படும், செவிடரின் செவிகளும் திறக்கப்பட்டிருக்கும். அப்பொழுது இரண்டாம் இரட்சிப்பு ஒட்டு மொத்த மனுக்குலத்திற்கும் பயனுள்ளதாயிருக்கும். அது புதிய சுபாவமான ஆவிக்குரிய இரட்சிப்பல்ல, தேவதூதர்களுக்கு ஒப்பான இரட்சிப்புமல்ல, அது பூரண மனித சாயலையடையும் இரட்சிப்பாயிருந்து, பாவம் மற்றும் மரணத்திலிருந்து தேவ சாயலுக்கு மேலெழுப்பப்பட்டு, ஆதிதகப்பனாகிய ஆதாம் பாவம் செய்யுமுன்பிருந்த ஆதி பூரணத்துக்கு ஒப்பாக இருக்கும்.

இரு இரட்சிப்புக்களுமே பிரமாண்டமாயும் மகிமையாயும் இருப்பினும், சபையின் இரட்சிப்பு மிக அதிக மகிமைக்குரியதாய் இருக்கும். இந்த இரட்சிப்புக்கு மாத்திரமே இப்போது வாய்ப்பு திறந்துள்ளது. அதற்கான நடைபாதையானது, அர்ப்பணிப்பு மற்றும் சுயத்தை பலிசெலுத்துதல் என்னும் தாழ்வான வாசலாகவும், குறுகலான வழியாயுமிருந்து, இயேசுவின் அடிச்சுவட்டில் நடப்பதாகும்.

--------

**R 5465**

## "ஐசுவரியமுடையோரின் சிரமங்கள்"

### "DIFFICULTIES OF THE RICH"

**ஆதார வசனங்கள் : மாற்கு 10 : 17–31.**

**திறவுகோல் வசனம்: லூக்கா 16:13 "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது"**

மிகுந்த ஆஸ்தியுள்ள அதிகாரியாய் இருந்த ஒரு வாலிபன் போதகரைப் பின்தொடர்ந்து ஓடிவந்து, அவருக்கு முன்பாக முந்திச் சென்று, இயேசுவின் காலடியில் முழங்கால் படியிட்டு, "நல்ல போதகரே நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும்"(மாற்கு 10:17) என்று கேட்டான். இதனைக் கண்ட இயேசுவின் சீஷர்களுக்கு இது ஓர் உற்சாகமான காட்சியாக இருந்திருக்கவேண்டும். இக்கேள்வியானது மிகவும் நம்பிக்கையான பாடமென்பதை நம் அனைவரும் ஒப்புக்கொள்கிறோம். நல்ல போதகர் அக்கேள்விக்கு நேரடியாக பதிலளிக்கவில்லை, மாறாக, அந்த வாலிபனுடைய அனுகூலத்துக்காகவும், பின்னர் அந்த நிகழ்வை இன்றளவும் படித்து வருகின்ற மற்றவர்களின் அனுகூலத்துக்காகவும், "நல்லவன்" என்ற பெயர் தமக்கு ஏன் பயன்படுத்தப்பட்டது என்று அவனிடம் வினவினார். உண்மையில் நன்மையான யாவும் ஏதோவொரு விதத்தில் தேவனுக்குரியதும் அவருக்கு இணக்கமாகவும் இருக்கின்றது என்பதை அந்த வாலிபனும், மற்றனைவரும்கூட கவனிக்க வேண்டுமென்று அவர் விரும்பினார்.

இயேசுவை இரண்டு வகையில் மாத்திரமே கண்ணோக்குவதற்கு வாய்ப்பிருந்தன. ஒன்று, அவர் கூறியதுபோல், அவர் மனுக்குலத்தின் நலனுக்காக ஒரு விசேஷித்த பணியினிமித்தம், தேவனுடைய குமாரனாக உலகத்திற்கு வந்ததினிமித்தமாக,தேவனுடைய ஊழியக்காரராக இருந்தார். அல்லது, மற்றொன்று, அவர் அவ்வாறு தேவ குமாரனாக இல்லாதிருப்பாரானால், தம்மைத் தவறாகச் சித்தரித்து, ஜனங்களை ஏமாற்றிய, மோசமான, மிகவும் மோசமான ஒரு வஞ்சகனாய் இருந்திருப்பார். அந்த வாலிபன் மொழிந்த வாக்கியத்தின் அழுத்தத்தை அவன் கருத்தில் கொள்ளவும், அதற்கும் <u>மேலானவைகள் சார்ந்திருக்கின்ற</u> இந்த முக்கியமான கேள்வியைப் பற்றி உடனடியாக தீர்மானிக்கவும் இயேசு விரும்பினார்.

பதிலுக்காகக் காத்திராமல், இயேசு இவ்வாறாகத் தொடர்ந்தார். "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே"(மாற்கு 10:19) என்றார். அதற்கு அந்த வாலிபன்: "இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்"(மாற்கு 10:20) என்று பதிலளித்தான். இயேசு அவனைப்பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு, " நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா"(மாற்கு 10:21) என்றார்.

**இயேசு சொன்னதன் அர்த்தம் என்ன ?**

கற்பனைகளைக் கைக்கொள்வதே நித்திய ஜீவனுக்கான வழியென்று அந்த வாலிபனிடம் இயேசு

சொன்னதன் அர்த்தமென்ன? நாமோ இன்றைய நாளில் அவனிடம் அவ்வாறு சொல்லப்போவதில்லை. மாறாக, அவரால் கற்பனைகளை பூரணமாகக் கைக்கொள்ள முடியாது என்றும், நித்திய ஜீவனுக்கான அவனுடைய ஒரே நம்பிக்கை, கிறிஸ்துவின் மீதும், பாவங்களுக்காக அவர் செலுத்தின பலியின்மீதும் விசுவாசத்தைப் பயிற்றுவிப்பதன் மூலமாக மாத்திரமே இருக்கிறது என்று நாம் அவனிடம் கூறுவோம்.

இயேசு ஏன் நியாயப்பிரமாணத்தைச் சுட்டிக் காட்டினார்? பதினாறு நூற்றாண்டுகளுக்கும் மேலாக, இஸ்ரயேலில் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது இன்னும் நடைமுறையில் இருந்ததே காரணம் என்று நாம் பதிலளிக்கிறோம். யூதர்களுக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தம் நியாயப்பிரமாணத்தைக் குறித்ததாயிருந்தது. "இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்"(ரோமர் 10:5). நித்திய ஜீவன் பெறுவதற்கான நிபந்தனை நீதியே ஆகும். யூதர்கள் அனைவரும் இதைப் புரிந்துகொண்டிருந்தார்கள். இந்த வாலிப அதிகாரியும், தான் அதனைப் புரிந்துகொண்டதாகவும், இந்த விதிப்படி ஜீவிக்க முயற்சித்துவருவதாகவும் அறிக்கையிட்டான். ஆயினும்கூட, எஞ்சியிருக்கும் ஜாதியைப் போலவே, தான் மரித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார். எனவே இப்படியாக அவரது கேள்வி இருந்தது. அதற்கு இயேசுவின் பதில், "நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள மாத்திரம் முயலக்கூடாது, இனிமேலும் கூடாது; நீங்கள் ஒரு பலிசெலுத்துபவராக இருந்து, தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னுடைய முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும்" என குறிப்பிடப்பட்டது.

ஐசுவரியத்தைப் பொறுப்பற்ற முறையிலோ அல்லது கண்மூடித்தனமாகவோ வழங்கிடவேண்டும் என்று இயேசு கூறினாரென்று நாம் அவசரப்பட்டு எண்ணிடலாகாது. அந்த வாலிபன் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு, தன்னுடைய ஐசுவரியத்தை எவ்வாறு சிறப்பாக பகிர்ந்தளிப்பது என்று கர்த்தரிடம் கேட்டிருந்தானேயாகில், கரத்தர் அவனிடம், "அனைத்தையும் தேவனுக்கே கொடுத்துவிடுங்கள்; பின்னர், அவருடைய உக்கிராணக்காரனைப்போல, அவருடைய பராமரிப்பின் வழிநடத்துதல்களின்படியும், தேவன் தங்களுக்கு அருளும் ஞானத்தின்படியும் நீங்கள் அதனை பகிர்ந்தளிக்கலாம் எனக் கூறியிருந்திருப்பார். பூமிக்குரிய உடைமைகளை முழுமையாக சரணடையச் செய்தாலும்கூட இராஜ்ய வகுப்பாரில் இடம்பெறப்போகின்ற ஒருவருக்கு அது போதுமானதாக இருக்காது. அவர் இன்னுமதிகமாகச் செய்யவேண்டியிருக்கிறது. அவர் கர்த்தருடைய ஊழியத்தில் சுறுசுறுப்பாக இருந்தும், தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டும், சுயத்தினை வெறுத்தலை கைக் கொண்டும், சுயத்தினை பலிசெலுத்தும் இடுக்கமான வழியில், மீட்பரின் அடிச்சுவடுகளை, மரணபரியந்தம் பொறுமையாக பின்பற்றவும் வேண்டும்.

யூத யுகம் முடிவுற்றபிற்பாடு, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன்மூலமாக கிடைக்கும் நித்திய ஜீவனுக்கான சாத்தியக்கூறை இயேசு பரிந்துரைத்திருக்க மாட்டார். மாறாக, எந்தவொரு அபூரண மனிதனும் தெய்வீகப் பிரமாணத்தை பூரணமாக கைக்கொள்வது சாத்தியமற்றது என்பதையும், அவனுடைய குறைபாடுகளை மறைக்க, கிறிஸ்துவின் புண்ணியத்தைத் தரித்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் தெளிவாகக் கூறியிருப்பார். இவ்வாறாக மாத்திரமே "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்"(ரோமர் 8:4).

**மிகுந்த ஆஸ்தியுடையோர் துக்கமடைவர்**

யூத வாலிப அதிகாரி தேவனுடைய சித்தத்தைச் செய்ய ஆர்வமாக இருந்தார். ஆனபோதிலும் சிறுமந்தையில் அங்கத்தினராக தகுதியடையுமளவு போதுமான ஆர்வங்கொள்ளவில்லை. அவர் சரியானதை நியாயமாகச் செய்யத் தயாராக இருந்தார். ஆனால் பலிசெலுத்த மனதில்லாதிருந்தார். அதற்கு மாறாக, இயேசுவும் அவருடைய பின்னடியார்கள் அனைவரும் தங்களது ஜீவனை மரணபரியந்தம் பலியாகக் கொடுத்தார்கள். "உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்" (ரோமர் 12:1).

வாலிப அதிகாரியிடமிருந்த ஐசுவரியமானது தீங்குண்டாக்கவில்லை. தேவன் தாமே ஐசுவரியத்தில் சம்பூரணராயிருக்கிறாரே. முற்காலத்தில் வாழ்ந்த ஆபிரகாமும்கூட ஆஸ்திகளையுடைய சீமானாயிருந்தாரே(ஆதியாகமம் 13:2). சிரமம் யாதெனில், அந்த வாலிபன் ஐசுவரியத்தின்மீது தன்னுடைய மனதை வைத்திருந்தான். அதனால் அவன் ஐசுவரியத்தை நேசிக்கிறானா அல்லது தேவனை அதிகமாக நேசிக்கிறானா என்கிற சோதனை நேரம் வந்தபோது, தான் தேவனையும், தெய்வீக சித்தத்தையும் விட, பூமிக்குரிய ஆஸ்தியை அதிகம் நேசித்ததை நிரூபித்தான். மாபெரும் நன்மையைச் செய்வதற்கான வாய்ப்பை அவன் கைவிட்டான். இதனால் இராஜ்ய வகுப்பாரில்

அங்கத்தினராக ஆவதிலிருந்து பின்னிட்டுத் திரும்பினான். எவ்வாறாயினும், இயேசுவினிடத்தில் அன்புகூரும் வண்ணமாக ஓர் நேரிய குணலட்சணத்தைக் கொண்டிருந்த அந்த வாலிபனுக்கு, எந்த நம்பிக்கையும் கிடையாதென்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. ஏற்றக்காலத்தில் அவர் தேவையான படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வார். இராஜ்யத்தின் வாய்ப்புகளை இழந்தாலும்கூட, அவர் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அடைவதில் ஒருவராக இருக்கக்கூடும்.

இயேசு கிறிஸ்து இந்த பரீட்சையை சுட்டிக் காட்டி கூறுகிறார்; "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" (லூக்கா 16:13). "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"(2தீமோத்தேயு 3:12). என்கிற நிச்சயத்துடன், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, மகிமை கனம் மற்றும் அழியாமையை அடைவதற்கான பாதையானது ஒரு கரடுமுரடானதாக இருப்பதைக் கண்டடைந்து, எப்–பலி செலுத்தியாயினும் தேவ ஊழியர்களாக இருக்கவேண்டுமென்பதே இந்த சுவிசேஷயுகத்தின் அழைப்பாகும். நாம் ஒரே நேரத்தில் ஐசுவரியத்துக்கும் தேவனுக்கும் ஊழியர்களாக இருக்க முடியாது என்பதற்காக, தேவன் இந்த விஷயத்தை தீர்மானமாக வைத்திருக்கிறார். அவர் நம்மை சோதனைப்புள்ளிக்கு கொண்டுவர விரும்புகின்றார். இப்போது தேவ புத்திரர்களாகவும் கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகவும், உலகத்திலிருந்து அழைக்கப்படுகின்ற இவ்வகுப்பார் அனைவருக்கும், "தேவனே முதலாவது" என்பதே சோதனையாம். நம்முடைய தேவபக்தியை தேவனிடமிருந்து விலக்கி, விசுவாசிகளுக்கு அவர் இப்போது அளித்து வரும் ஐசுவரியமிக்க ஆசீர்வாதங்களைப் புறக்கணிக்கத் தூண்டுகிற, ஐசுவரியம் அல்லது புகழ் அல்லது சுயநலமான சௌகரியம் போன்ற எந்த விக்கிரகங்களையும் நாம் பெற்றிருக்கக்கூடாது.

**இராஜ்யத்தில் ஐசுவரியவான்கள் வெகுசிலரே இருப்பர்**

ஆஸ்தியுள்ள வாலிபன் இயேசுவின் நிபந்தனைகளின்பேரில் சீஷராகத் தவறியது, இயேசுவுக்கு ஒரு கருத்தினை அமைத்துக் கொடுத்ததால், அவர் தம்முடைய சீஷர்களிடம் இவ்வாறாகக் கூறினார்: "ஐசுவரியவான்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது!"(மாற்கு 10:23). அதாவது, எந்தவொரு ஐசுவரியவானும் இராஜ்ய வகுப்பாரில் பிரவேசிப்பதென்பது எவ்வளவு கடினமாயிருக்கின்றது!

சீஷர்கள் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்தார்கள். ஏனென்றால் தங்களுடைய நாட்களில் பரிசுத்த ஜனங்கள் என கூறிக்கொண்டிருந்தவர்களில் பெரும் பகுதியினரில், வெகுசிலரே இயேசுவின் சீஷர்களக இருந்தார்கள். ஐசுவரியமிக்க யூதர்கள் முக்கியமாக பரிசேயர்களுடன் தொடர்புகொண்டிருந்தார்கள். அப்படியானால், அந்த சொற்ப ஐசுவரியவான்கள் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது எவ்வாறு? அது தவறில்லையா? அவ்வாறு இயேசு அர்த்தப்படுத்தியிருப்பாரா?

ஆனால் இயேசுவோ தம்முடைய போதனையை இவ்வாறு கூறி வலியுறுத்தினார்: "ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது! ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்"– மாற்கு 10:24,25; மத்தேயு 19:23,24.

**ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது**

நமது கர்த்தர் பயன்படுத்திய "ஊசியின் காது" பற்றிய விளக்கம் நம்முடைய மொழிபெயர்ப்பாளர்களால் உள்நோக்கமின்றி தவறுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எத்தனைபேர், கைகளால் தைக்கும் ஒரு சாதாரண ஊசிநூலை நோக்கிப்பார்த்து, அதின் காது சிறியதாய் இருக்கிறதையும், ஒட்டகம் அதன் வழியாகச் செல்ல முடியாததையும் கவனித்து, குழப்பமடைந்துள்ளனர்!

இயேசுவால் குறிப்பிடப்பட்ட ஊசியின் காது என்பது, நகரத்தின் அலங்கத்தில் இருக்கும் பெரிய வாயிற்கதவில் இருக்கக்கூடிய ஒரு சிறிய கதவிற்கான அல்லது திறப்பிற்கான பெயராகும். கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்க, எருசலேமின் பெரிய வாயிற்கதவுகள் இரவில் மூடப்பட்டு, ஜாமக்காரர்களால் காவற்காக்கப்படும். கணிசமான எண்ணிக்கையிலான ஆயுதபாணிகள் நகருக்குள் நுழைந்து கொள்ளையடிக்கக்கூடாது என்பதற்காக, காலை வரை வாயிற்கதவுகள் திறக்கப்படாதிருக்கும். ஆயினும் கதவு மூடப்படுவதற்கு முன்னரே வரத்தவறிய பயணிகளுக்கு ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஊசியின் காதுபோலிருக்கும் சிறிய வாயிலானது, ஓர் ஒட்டகம் தன் மீதிருக்கும் சுமைகளனைத்தையும் கீழே இறக்கியபின், அதன் வழியாக நுழையுமளவு போதுமான அளவுக்கு இருந்தது. இவ்வாறு புரிந்துகொண்டபடி, தன் சுமைகளை அகற்றினபிறகு, ஓர் ஒட்டகமானது ஊசியின் காதுபோன்ற சிறிய வாயிற்கதவின் வழியாக செல்ல சாத்தியமாயிருப்பதுபோல, ஒரு ஐசுவரியவானும் தன் சுமைகளைத் துறந்து, அனைத்தையும் கர்த்தருக்குக் கொடுப்பதன் மூலம் மாத்திரமே தேவனுடைய இராஜ்யத்திற்குள் நுழைய முடியும் என்பதை இயேசு கற்பித்தார்.

அனுகூலமான வகுப்பாரான ஐசுவரியவான்களை ஏழைகள் அல்லது தயவற்ற வகுப்பாருடன் ஒப்பிடுகையில், ஒரு அனுகூலமற்ற நிலையில் வைப்பதென்பது இயேசுவின் சீஷர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர்கள்,''அப்படியானால், யார் இரட்சிக்கப்படக்கூடும்''(மாற்கு 10:26) என்று கேட்டார்கள். அதாவது, மற்றவர்களைக் காட்டிலும் ஐசுவரியவான்களுக்கு , அதிக மற்றும் சிறந்த ஊழியத்தை கர்த்தருக்கு வழங்க உதவும் நேரம், செல்வாக்கு மற்றும் பணம் ஆகியவற்றின் அனைத்து வாய்ப்புக்களும் இருந்தன. அவர்களே இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதில் இத்தகைய சிரமம் இருந்தால், மற்றவர்களுக்கு, வெளிப்படையாகக் கூறினாமானால், அதாவது அனுகூலமற்றவர்களுக்கு எப்பேர்ப்பட்டதாய் இருக்கும் ? அதற்கு இயேசு பதிலுரையாக, ''தேவனாலே எல்லாம் கூடும்'' என்றார். அதாவது, ஐசுவரியவானின் இருதயமானது கர்த்தருக்குப் பிரியமானதாக இருந்தால் – அவர் நேர்மையான இருதயமுள்ளவராகவும், தாழ்மையானவராகவும் இருந்து, அவருடைய ஐசுவரியங்கள் மட்டும் தடையாய் இருக்கின்றன என்றால் – அவற்றின் பயன்பாட்டைக் குறித்ததான தம்முடைய சித்தத்தை அவருக்குக் காண்பிப்பது எவ்வாறென்று கர்த்தர் அறிவார்; அல்லது இது பயனடையவில்லை என்றால், தனது ஒட்டகத்தின் சுமைகளை அகற்றி, அதனை ஊசியின் காது வழியாகச் செல்ல அனுமதித்த எஜமானரைப்போல, கர்த்தரும் அம்மனிதனுடைய ஐசுவரியத்தை அகற்றுவது எவ்வாறென்று அறிவார்.

இந்த அனுபவத்தை பலரும் அடைந்திருப்பதுண்டு. அவர்கள் மனிதர்கள் மத்தியில் மேன்மையாக, சமூக நிலைப்பாட்டிலோ அல்லது பொருளாதாரத்திலோ ஐசுவரியவான்களாக இருந்தவர்கள்; தேவன் அன்பினாலும் இரக்கத்தினாலும் இவை அனைத்தையும் நீக்கிவிட்டு, அவர்களுக்குத் தேவையான படிப்பினைகளை அளித்து, இராஜ்யத்தில் பங்கடைவதற்கு ஏதுவாக அவர்களைப் பொருத்தியும் தயார்ப்படுத்தியும் வந்திருக்கின்றார். தேவனால் இது கூடும். முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு அனைத்தையும் எவ்வாறு நன்மைக்கேதுவாக செய்வது என்பதை அவர் அறிவார்.

**''நாங்கள் எல்லாவற்றையும் விட்டு''**

இராஜ்யத்தில் எஜமானருடன் உடன் சுதந்திரர்களாவதென்பது, அவரிடம் முழுமையாக சரணடைவதைக் குறிக்கும் – அதாவது, தேவனை நெருக்கமாக அணுகி, அவரால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், அனைத்தையும் விட்டுவிடுதலையும், அனைத்தையும் கொடுப்பதையும் குறிக்கும் என்னும் கருத்தினை பரிசுத்த பேதுரு கொடுக்கின்றாரென தெரிகின்றது. ''இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே''(மாற்கு 10:28) என பரிசுத்த பேதுரு கூறினார்.

பரிசுத்த பேதுருவின் கூற்றை இயேசு முழுமையாக ஆதரிக்கவில்லை. எல்லாவற்றையும் விட்டுவிடாத யூதாஸைப் பற்றி அவர் அறிந்திருந்தார். சில சுயவிருப்பங்கள் இன்னும் இருக்கின்றவரும், மேலும் தனது சுய பாதுகாப்பிற்காக எஜமானரை மறுதலிக்கப்போகும் பேதுருவைப் பற்றியும் அவர் அறிந்திருந்தார். ஆனால் இயேசு அளித்த பதிலானது, அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமல்ல, அன்றிலிருந்து இன்றுவரை இயேசுவின் சீஷர்களாக மாறிய அனைவருக்குமான கேள்விக்கான முழுமையான பதிலை உள்ளடக்கியிருந்தது. அவர் இவ்வாறாக கூறினார்:

''என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே(யுகத்திலே) நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் – மாற்கு 10:29,30.

எப்பேர்ப்பட்ட ஒரு பரந்த வாக்குத்தத்தம்! மேலும் பலருக்கும் அதன் பூமிக்குரியவைகளில் எவ்வளவு அதிகமாக நிறைவேறியுள்ளது! நிச்சயம் அவர்களுக்கு துன்பங்களுண்டு; ஆனால் கர்த்தருடைய ஊழிய காரணத்திற்காக பலிசெலுத்தப்பட்டஒவ்வொன்றுக்கும், இம்மையிலே நூறத்தனையாக ஈடுசெய்யப்படுகின்றன. அதற்கப்பால், உண்மையுள்ளவராயிருப்பாரானால், நித்தியஜீவனும், இராஜ்யத்தில் எஜமானரோடுகூட பங்கும் அளிப்பது – எவ்வளவு கிருபை நிறைந்த தெய்வீக ஏற்பாடுகளாயுள்ளன!

''ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்'' –மாற்கு 10:31. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தெய்வீக அனுகூலத்திற்கும், இராஜ்யத்திற்கு உயர்த்தப்படுவதற்கும் மாபெரும் சிலாக்கியமும் வாய்ப்புமுள்ள பலர், அந்த வாய்ப்பைப் பெறத் தவறிவிடுவார்கள். ஆனால் இயற்கையாகவே தயவற்ற நிலையிலிருக்கும் மற்றவர்களோ, கனம் மகிமை மற்றும்

அழியாமை ஆகியவற்றின் மாபெரும் பரிசைப் பெறுவார்கள். இயேசுவின் முதலாம் வருகையின்போது, முதன்முதலில் இயேசுவின் சீஷர்களாக ஆவதற்கான வாய்ப்பைப் பெற்றவர்கள், அக்காரணத்திற்காக(அப்போஸ்தலர்களைத் தவிர) எதிர்காலத்தில் கர்த்தருடைய சீஷர்களாக இருக்கும் மற்றவர்களைக் காட்டிலும் முன்னுரிமையோ நன்மையோ கொண்டிருக்க மாட்டார்கள். இங்கேயும் அவர்கள் அவ்வாறு இருக்க மாட்டார்களென நாம் சொல்லலாம்.

---------

**R 5469**

# "நான்கு காற்றுகள்" கட்டவிழ்க்கப்படுதல்

## LOOSING THE "FOUR WINDS"

**திறவுகோல் வசனம்: தானியேல் 12:1 "யாதொரு ஜாதியாரும் தோன்றியதுமுதல், அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்"**

இந்த வாக்கியம் விசித்திர ஆற்றலுள்ள ஏதோவொன்றை உள்ளடக்கியுள்ளது. தானியேலினுடைய தீர்க்கதரிசனத்தில் இந்த வசனத்திலுள்ள, "அக்காலமட்டும் உண்டாயிராத" என்ற வார்த்தைக்கு விசேஷித்த முக்கியத்துவம் கொடுத்து, உபத்திரவம் மிகுதியாக இராது, மாறாக, முந்தைய யாதொரு உபத்திரவத்தைக் காட்டிலும் இது வித்தியாசமானதாய் இருக்கும் என்பதையே இவ்வசனம் அர்த்தப்படுத்துகிறது எனக்கூறும் சிலரை நாம் அறிவோம். அக்கருத்தை நாம் பகிரப் போவதில்லை. இது மிகவும் தீவிரமானதாகவும், மிகவும் பரவலாக பரவக்கூடிய உபத்திரவமாகவும், இதுவரை அறியப்பட்டதிலேயே மாபெரும் பொது உபத்திரவமாக இருக்கும் என்பதே நம்முடைய கருத்தாக இருக்கிறது. இக்கருத்தினை உறுதிப்படுத்தும் அநேக விஷயங்களை நம்மால் காணமுடிகிறதே! இக்காலத்தில் அராஜகம் நேர்ந்தால், அது உலக வரலாற்றின் முந்தைய எக்காலத்தைக் காட்டிலும், மனுக்குலத்தை மிகவும் பாதிக்கும் என்பதை நாம் தெளிவாகக் காணலாம்.

கடந்த காலத்தில் நகரங்கள் ஒரு பெரிய விவசாயப் பகுதி மூலம் ஆதரிக்கப்பட்டன; மேலும் ஒவ்வொரு விவசாயியும் தனது பங்குகளை தங்களிடமே வைத்திருந்து, நுகர்வோர்க்கு நேரடியாக விற்கவே பழக்கப்பட்டிருந்தனர். இன்றோ நகரங்கள் முன்பைவிட பெரியதாகவும், அதிக அளவில் ஜனத்தொகையுடையதாகவும் இருக்கின்றன. இந்த நகரங்களுக்கு உணவு அதிக அளவில் அனுப்பப்படுகின்றது. அதோடுகூட, ஜனங்களும் ஊதாரித்தனமுள்ளவர்களாய் ஆகிவிட்டனர். அநேகமாக முன்னெப்போதையும்விட ஒரு நாகரீகம் வாய்ந்த ஜனங்களாக நாம் ருசியுள்ள உணவை உண்கிறோம். முந்தைய காலங்களில் ஜனங்கள் உண்டதைப் போல் உண்டால் நாம் பட்டினி கிடப்பதுபோல உணர்வோம்.

நமது கர்த்தர் ஐந்தாயிரம் பேருக்கு அப்பம் மற்றும் சிறிய மீன்களைக் கொண்டு உணவளித்தார். அக்காலத்தில் புல்லில் உட்கார்ந்து, ஒரு கையில் அப்பமும், மறு கையில் ஒரு மீனையும் பிடித்துக்கொண்டு புசித்ததுபோல, இப்போது ஜனங்கள் திருப்தியடைய மாட்டார்கள். இப்போது அவர்கள் கத்திகள் மற்றும் முட்கரண்டி போன்றவையும், குறைந்தபட்சம் ஐந்து வகையான உணவுகளேனும் விரும்புவார்கள். தாங்கள் ஒரு மீன் துண்டையும் உலர்ந்த அப்பத்தையும் மாத்திரம் வைத்திருந்தால் பட்டினியாக இருப்பதுபோல் நினைப்பார்கள். இப்போது, அவர்கள் துணிக்கைகளைச் சேகரிப்பதற்கு பதிலாக, துணிக்கைகளைத் தூக்கி எறியவே எண்ணுவார்கள்.

**வரப்போகிற ஆபத்துக்காலத்தின் அறிகுறிகள்**

இங்கிலாந்தின் சில பெரிய நகரங்களில், கடந்த ஆண்டு(கட்டுரை எழுதப்பட்ட ஆண்டிற்கு முந்தைய ஆண்டு– அதாவது 1913ம் வருடம்) நடந்த வேலைநிறுத்தம் நமக்கு நினைவுக்கு வருகின்றது. லிவர்பூலில், அரசாங்கத்தின் இராணுவ வீரர்களைக் காவலுக்கு வைத்ததன் மூலமே ஜனங்களின் பட்டினியைப் போக்க உணவினை விநியோகிக்க முடிந்தது. ஆகவே முழு நகரங்களும் எவ்வளவு விரைவாக, சட்டம் ஒழுங்கற்ற நிலைக்கு ஆளாகி, அனைவரும் பசியோடு படுக்கைக்குச் செல்ல நேரிடும் என்பதையும், பொருட்கள் வருவது தடைப்பட்டால் அவர்கள் விரைவில் பட்டினிக்கு ஆளாவார்கள் என்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது.

சில வகைகளில் இந்த உபத்திரவமானது, கடந்த காலத்தில் காணப்படாத ஒரு மூர்க்கத்தனத்துடன் ஒன்றிணைந்திருக்கும் என்று நம்புவதற்கு நம்மிடம் காரணமிருக்கிறது. உலக வரலாற்றின் ஒவ்வொரு யுகத்திலும் அட்டூழியங்கள் நிகழ்ந்து வந்துள்ளன என்பது உண்மைதான். கிறிஸ்தவம் என்னும் பொய்யான பெயரால் அழைக்கப்படும் ஒரு வெளிவேஷமான மதத்தினை இப்போது நாம் பெற்றிருக்கின்றோம் என்பது உண்மைதான். ஆனால் அதில் எந்தக் கிறிஸ்தவமும் இல்லை. இந்த வெளிவேஷத்தைக் கீறி, அதற்குக் கீழே உள்ள காட்டுமிராண்டித்தனமான சுபாவத்திற்குள் செல்வது எவ்வளவு எளிதென்பதை நாம் மென்மேலும் தெளிவாகக் காண்கின்றோம். இது இவ்வாறு இருப்பதால், உலகின் ஒரு பகுதியின் உதவியை இன்னொரு பகுதிக்கு வழங்குவது

என்பது எவ்வாறு முடிவுக்கு வரும் என்பதை நாம் காணலாம். மேலும் பொல்லாத ஆவிகள் எவ்வாறு தூண்டப்படும் என்பதையும் நாம் காண்கின்றோம். வரவிருக்கும் உபத்திரவத்தின் தீவிரமானது, இதுவரைக்கும் ஒருபோதும் அறியப்படாததுபோல் இருக்கும் என்ற, நம்முடைய கர்த்தரின் வார்த்தைகள் நிஜமாகவே உண்மை என்று நம்புவதற்கு நம்மிடம் அனைத்துக் காரணங்களும் இருக்கின்றன.

யூதயுகத்தின் முடிவில் வந்த உபத்திரவமானது, இந்த யுகத்தின் முடிவில் வரும் மாபெரும் உபத்திரவத்தின் ஒரு நிழலாக அல்லது ஒரு முன்னடையாளமாக, ஒரு இணையான சம்பவமாக இருந்தது என்பதை மீண்டுமாக புரிந்துகொள்கிறோம். அவ்வேளையில் யூத தேசத்தின்மீது வந்த உபத்திரவமானது, உலக வரலாற்றிலேயே மிகவும் கடுமையான ஒன்றாகக் கருதப்பட்டது. இந்த யுகத்தின் முடிவில் வரும் உபத்திரவமானது உலகளாவிய வண்ணமாக – மிகப்பெரிய அளவில்இருக்கும்.

**கிறிஸ்துவின் இராஜ்யமே ஒரே நம்பிக்கை**

சோசியலிச இயக்கத்தைப் பொறுத்தவரை, சோசியலிசவாதிகள் தங்கள் யோசனைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் முற்றிலும் தோல்வியடைவார்கள் என்பதே நமது கருத்தாகும். சில யோசனைகள் நன்றாகவும், அவற்றில் சில நடுத்தரமாகவும், அவற்றில் சில மோசமானதாகவும் இருக்கின்றன. ஆனால் அவர்களால் ஒருபோதும் அவர்களின் சிறந்த யோசனைகளைச் செயல்படுத்தமுடியாது. ஏனென்றால் மூலதனத்தைக் கட்டுப்படுத்தி, உலக விவகாரங்களை நிர்வகிப்பவர்கள் அவர்களுக்கு ஒருபோதும் வாய்ப்பளிக்க மாட்டார்கள். சோசியலிசமோ, அராஜகவாதமோ அல்லது முதலாளித்துவமோ எது அராஜகத்தைக் கொண்டுவரும் என்பது, எந்தத் தடையினை நீக்குவது மிகவும் கடினமாக இருக்குமோ அதைப் பொருத்தது.

அனைத்துக் கட்சிகளுமே மிகவும் ஆர்வமுள்ளவைகளாகவும், மிக தீவிரமானவைகளாகவும், மிகவும் பிடிவாதமானவைகளாகவும் இருக்கின்றன. சோசியலிசம் அதிகாரத்துக்கு வருமானால், முழு நாடும், மற்ற ஒவ்வொரு நாடும் பாழாகிவிடும் என்று முதலாளிகள் அஞ்சுகிறார்கள். எனவே அதற்கு வாய்ப்பளித்து பரிசோதிப்பதைக் காட்டிலும், அதை கைவிடவே அவர்கள் தயாராக இருப்பார்கள். அப்படியாக, சோசியலிசவாதிகள், அரசாங்கத்தின் ஆட்சியைப் பிடிக்க போதுமான அதிகாரம் பெறுவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பதில்லை. வாக்களிக்கப்பட்ட தெய்வீக வல்லமை இராஜ்யத்தை அமைக்கும்வரை, இந்த முயற்சி அராஜகத்தையே ஏற்படுத்தும் என்று நாம் நினைக்கிறோம்.

இதன் மூலமாக, நாம் குறிப்பிட்ட எந்தவொரு கட்சியையும் குற்றம் சாட்டுவதில்லை. தோல்வியின் அழுத்தத்தின் காரணமாக, இருதிறத்தாரும் வீதிகளில் இரத்தம் பாய்வதைக் காண தயாராக இருப்பார்கள். அதாவது, மற்ற கட்சி வெற்றி பெறுவதைக் காட்டிலும் தங்கள் நோக்கத்தையும் யோசனைகளையும் தக்கவைத்துக்கொள்ள எவ்வளவு தூரத்திற்கு வேண்டுமானாலும் செல்லவும் தயாராயிருப்பார்கள் என்று நம்புகின்றோம். ஒவ்வொரு கட்சியும் தாங்கள் என்ன செய்கின்றோம் என்பது தங்களுக்குத் தெரியும் என்பதில் உறுதியாகவே இருக்கின்றன. சாத்தியமான தீர்வு எதுவுமே இருக்காது. அனைத்து தரப்பினரும் தாங்கள் சொல்வதுதான் சரி என்பதிலும், தாங்களே வெற்றி பெறுவோம் என்பதிலும் உறுதியாக இருக்கிறார்கள். நெருங்கி வருவதாகத் தெரிகிற நெருக்கடி உச்சநிலையை அடையும்போது, மாபெரும் சுழல்காற்று வரும், அது எல்லா நாகரீகங்களையும் அதற்கு முன்னால் அழித்தெறியும். தேவனுக்கு ஸ்தோத்திரம், மனிதர்கள் தங்கள் இயலாமையைக் கற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய நேச குமாரனின் இராஜ்யம் அதை முடிவுக்குக் கொண்டுவரும்!

**நான்கு பெரிய காற்றுகள்**

வெளிப்படுத்தல் 7:1இல், பரிசுத்த யோவான் இந்த சுழல்காற்றினைப் பற்றி குறிப்பிடுகின்றார்; "இவைகளுக்குப் பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுக்களையும் பிடித்திருக்கக் கண்டேன்". இங்கே குறிப்பிடப்பட்ட பூமியின் காற்றானது நிச்சயமாக அடையாள பாஷையாகும். வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கு திசைகளிலுமிருந்த காற்றுக்கள் அடியாதபடிக்குப் பிடிக்கப்பட்டிருப்பதாகவும், கட்டுப்பாடு திரும்பப் பெறப்பட்டபோது. அதாவது கட்டவிழ்க்கப்படும்போது, அவைகள் ஒன்றாக விரைந்து கூடிவரும், இதன் விளைவாக ஒரு சுழல் காற்று உண்டாகும் என்பதே கருத்தாகும். சில வேத வாக்கியங்கள் பூமியின் எல்லைகளிலிருந்து எழும்பும் ஒரு மகா புசல் பற்றிக் கூறுகின்றன– எரே23:19; 25:32,33; 30:23,24 பார்க்கவும். இது ஒரு நிஜமான சுழற்காற்றாக இருக்கும் என்பதாகப் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக இந்த அடையாள பாஷை மொழிநடையானது, ஆகாயத்து அதிகாரங்களுடைய கடுமையான பிரச்சனைகள் என்கிற கருத்தை வெளிப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ''ஆகாயத்தின் அதிகாரங்கள்'' அல்லது காற்றுகள் என்பது இயற்கையான காற்றின் வல்லமைகள் அல்ல, மாறாக பரிசுத்த பவுல், சாத்தானை ''ஆகாயத்து அதிகாரப் பிரபு''(எபேசி2:2) என பேசும்போது குறிப்பிடும் அதிகாரங்களாகும். சாத்தானின் கட்டுப்பாட்டில் இருந்த அந்த ஆவிகளான வீழ்ந்துபோன தூதர்கள், மகா நாளின் நியாயத்தீர்ப்பு வரை அந்தகாரச் சங்கிலிகளில் கட்டப்பட்டிருக்க வேண்டும்(2பேது2:4). இந்தக் காற்றுகளை அல்லது ஆகாயத்து அதிகாரங்களைக் கட்டவிழ்ப்பது என்பது, தேவன் தம்முடைய கட்டுப்பாட்டைத் தளர்த்தியிருக்கிறார் என்பதையும், அராஜகத்தில் சமூக ஒழுங்கை முழுமையாக தூக்கி எறிவதற்காக, ஒரு மாபெரும் பேரழிவாக உலகின்மீது வரவிருக்கும் பயங்கரமான உபத்திரவத்தை அவர் அனுமதிக்க வேண்டியிருக்கும் என்பதையும் காண்பிக்கிறது.

நமது நாட்களின் பல அனுகூலங்கள், மற்றும் உலகின்மீது பொழியப்படும் ஆசீர்வாதங்கள் ஆகியவைகள் இருந்தபோதிலும், ஜனங்கள் நன்றியற்றவர்களாகவும் நன்றியுணர்வு இல்லாதவர்களாகவும் இருப்பதைக் காண்கிறோம். அதிருப்தி வளர்ந்துகொண்டே வருகின்றது. இதன் விளைவாக ஒரு மாபெரும் சச்சரவு மற்றும் தற்போதைய அமைப்புக்களின் முழுமையான வீழ்ச்சி ஆகியன ஏற்படும். இறுதியாக சுதந்திரம் வழங்கப்படும்போது, இந்த வெளிப்புற ஆதிக்கமானது, மனிதர்கள்மீது ஒரு மோசமான விளைவை உண்டாக்குமென்பதை நம்முடைய ஆதார வசனம் உணர்த்துவதாகத் தெரிகின்றது. பல நூற்றாண்டுகளாக இந்த விழுந்துபோன ஆவிகள் கட்டப்பட்டு இருந்தன. ஆனால் இவைகள் அனுமதி பெற்றிருந்த அளவிற்கு தாக்கத்தையும் ஏற்படுத்தி வந்தனர். அவைகளுக்கு அளவற்ற வல்லமை முன்னமே வழங்கப்பட்டிருந்தால், அவைகள் நீண்ட காலத்திற்கு முன்பே உலகத்தை அழித்திருப்பர். ஆனால் அவைகள் அந்தகாரச் சங்கிலிகளில் கட்டப்பட்டிருக்கின்றன.

**விழுந்துபோன தூதர்கள் விரைவில் கட்டவிழ்க்கப்படுவார்கள்**

விழுந்துபோன தூதர்களுக்கான கட்டுப்பாட்டை தேவன் விரைவில் தளர்த்திவிடுவார். பின்னர் தங்களது சீற்றத்தை மனுக்குலத்தின்மீது காண்பிப்பார்கள். இதனால் நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, பூமியெங்கும் முழுமையாக வன்முறைகள் நிறைந்திருக்கும். ''நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்'' – லூக்கா 17:26.

தமது இரண்டாம் வருகையில், தாம் உலகிற்குக் காணப்படாதவராக பிரசன்னமாகியிருந்து, தம்முடைய ''சம்பத்தான''திருச்சபையைக் கூட்டிச்சேர்க்கும் பணியினைச் செய்துகொண்டிருப்பார். மேலும் உபத்திரவக்காலம் தங்கள்மீது வரும்வரை தமது பிரசன்னத்தை உலகம் அறியாது என்னும் கருத்தை இரட்சகர் கொடுத்தார் என்பதும் உண்மைதான். அவர்கள் புசிப்பதும், குடிப்பதும், கொள்ளவும், விற்கவும், நடவுசெய்வதும், கட்டுவதுமாக இருப்பார்கள் என்று அவர் கூறினார்(லூக்கா 17:27–30). இது உண்மையே. வரவிருக்கும் இராஜ்யத்தின் புதிய ஏற்பாட்டுக்கு, தாங்கள் எவ்வளவு சமீபித்திருக்கிறோம் என்பதைப் பற்றி உலகமானது அறியாதிருந்து, பெரிய ஒப்பந்தங்கள் போன்றவற்றிற்குள்ளாகச் செல்கின்றது. ஆனால் மிக அருகிலிருக்கும் எதிர்காலமானது கொடுங்குற்றம் மற்றும் கோபமான உணர்வுகளின் காலமாக இருக்கும் என்றே நாம் நம்புகின்றோம்.

மனுஷனுடைய இருதயத்திலுள்ள நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்று கர்த்தர் கண்ட(ஆதி 6:5) முற்காலத்தைப் பற்றி நாம் வாசித்திருக்கின்றோம். மிகவும் அவநம்பிக்கையான நிலைமை. இந்த ''நான்கு காற்றுகள் கட்டவிழ்க்கப்படுவது இன்னும் எதிர்காலத்திலிருக்கிறது என்பது நமது கருத்தாகும். கட்டவிழ்க்கப்படும்போது பிசாசுகளால் வெளிப்படுத்தப்படும் வல்லமையானது, மனுக்குலத்தைக் காயப்படுத்துவதாக இருக்கும் என்று நாம் நம்புகின்றோம். எங்களுக்குத் தெரியாது, ஆனால் நமது வாசகர்களில் பலரும் அந்தக் காயத்தில் பங்கடைவார்கள். விழுந்துபோன இந்தத் தூதர்கள் கட்டவிழ்க்கப்படும்போது, அவர்கள் தங்களது முதலாவது சீற்றத்தைக் கர்த்தருடைய ஜனங்கள்மீதே செலுத்துவார்கள் என்று எண்ணுவதற்கு நமக்கு எல்லாக் காரணங்களும் உள்ளன. ஆனபோதிலும், நாம் இதைக் குறித்து அஞ்சவேண்டியதில்லை. மாறாக சகலமும் நம்முடைய நன்மைக்காகச் செயல்படும் என்பதை அறிந்து, கர்த்தருடைய ஏற்பாடு அனுமதிக்கும் எதனையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். சிரமம் போதும், ''அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்''(மத் 6:3,4). கர்த்தருடைய கரங்களில் முழு காரியத்தையும் ஒப்புக்கொடுத்துவிட்டு, அவர்பேரில் நம்பிக்கையாய் இருப்போமாக.